TAMIL NADU LEGISLATURE
6 NOV 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1972 ஆகஸ்ட் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Courses in Polytechnics

* 86 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the various courses offered by the Polytechnics in this State as on 1st April 1971;

(*b*) the strength under various courses;

(*c*) whether this Government has any programme to introduce new courses in Polytechnics; and

(*d*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ)—(எ) விவரமான அறிக்கை @ ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கான பாலிடெக்னிக்குகள் மிகக் குறைவாக இருக்கின்றன. அவற்றை அதிகப்படுத்த அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே மூன்று இடங்களில் பெண்கள் பாலிடெக்னிக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கேற்ற கல்வி அங்கே பயிற்றுவிக்கப்படுகிறது. தேவைப்படுமானால் வேறு இடங்களிலும் ஏற்படுத்தலாம். ஆனால் இப்போதே மூன்று பாலிடெக்னிக்குகள் போதுமானவையாக இருந்து வருகின்றன.

* 87 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the Soviet financial assistance towards expansion of Technological Education in this State during 1972–73?

@ 646–652 -ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.